# பாப்பாவுக்கு அபிநயப்பாடல்கள் பத்து




ஆக்கம்
கலாபூஷணம் பண்டிதை
வை.கணேசபிள்ளை

# பாப்பாவுக்கு அபிநயப்பாடல்கள் பத்து



நா.கணேசபிள்ளை அவர்களின்
நினைவாக வெளியிடப்படுகின்றது
25.02.2015

ஆக்கம்
கலாபூஷணம், பண்டிதை
வை.கணேசபிள்ளை

தலையங்கம் : பாப்பாவுக்கு அபிநயப்பாடல்கள் பத்து

ஆசிரியர் : திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை

வெளியீடு : திரு.நா.கணேசபிள்ளை அவர்கள் ஞாபகார்த்த வெளியீடு

பதிப்பு : மாசி 2015

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

பதிப்பகம் : கஜானந்த் பிறின்டேர்ஸ் இணுவில்

# பாப்பாவுக்கு அபிநயப்பாடல்கள் பத்து



நா.கணேசபிள்ளை அவர்களின்
நினைவாக வெளியிடப்படுகின்றது
25.02.2015

ஆக்கம்
கலாபூஷணம், பண்டிதை
வை.கணேசபிள்ளை

தலையங்கம் : பாப்பாவுக்கு அபிநயப்பாடல்கள் பத்து

ஆசிரியர் : திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை

வெளியீடு : திரு.நா.கணேசபிள்ளை அவர்கள்
ஞாபகார்த்த வெளியீடு

பதிப்பு : மாசி 2015

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

பதிப்பகம் : கஜாணந்த் பிறின்டேர்ஸ்
இணுவில்

## என்னுரை

இப்பாடல்கள் யான் இராமநாதன் கல்லூரியில் கற்பித்த காலத்தில் எழுதப்பெற்றவையாகும். இவற்றைப் பார்வையிட்ட எனது கணவர் இவற்றை தொகுத்து வெளியிடும்படி அறிவுறுத்தியிருந்தார். சந்தர்ப்பம் வாய்க்கவில்லை தற்போது அவரது நினைவாக வெளியிட இறையருள் கிடைத்திருக்கின்றது.

இத்தொகுப்பில் பதினொரு அபிநயப்பாடல்கள் உள்ளன. ஏற்கனவே மாணவர்களினால் அபிநயிக்கப்பட்டவை. முதல் இரு பாடல்களும் விரிவுரையாளர் திருமதி விக்கினேஸ்வரி நரேந்திராவினால் கல்வியியற் கல்லூரியில் வெளியிடப்பட்ட அபிநயப்பாடல் தொகுப்பில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. சிறுவர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தினால் ஏனைய பாடல்கள் இத்துடன் தொகுக்கப்பட்டுள்ளன.

இது எனது கணவர் திரு.நா.கணேசபிள்ளை ஆசிரியர் நினைவாக (சமர்ப்பணமாக) வெளிவருகின்றது.

திருமதி. வைகுந்தம் கணேசபிள்ளை

# பொம்மை





சின்னச் சின் பொம்மை சிறிய நல்ல பொம்மை
என்னவேண்டும் சொல்லேன் – ஏனோ
பேசவில்லை

காலுங்கையும் ஆட்டிக் கண்சிமிட்டும்
பொம்மை
கோல அழகு கண்டு கொஞ்சிவிட்டேன்
உன்னை

லா ......லா ...... லா ..... லா .........
லா ......லா ...... லா ..... லா .........

பட்டுச்சட்டை தாரேன் பஞ்சணையும் தருவேன்
போட்டுமிட்டு விடுவேன் புன்சிரிப்பைப் பாரேன்
ஏணைகட்டி விடுவேன் உறங்கி நீயும் பாரேன்
தாலாட்டுப்பாடி தூங்க வைப்பேன் உன்னை

ஆராரோ ஆரிரரோ ஆரிரரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ ஆரிரரோ ஆரிரரோ

அண்ணா உன்னை அடிக்கமாட்டேன்
அழாமல் தூங்கி விடு
கண் விழித்து பார்த்தவுடன்
கட்டி முத்தம் தந்திடுவேன்
அம்மா உன்னை அணைத்திடுவாள்
மாலை நேரம் வந்தவுடன்
மாமா வீட்டுக்குத் தூக்கிச் செல்வேன்



லூ .........லா ........ லா ........ லா .........
லா .........லா ........ லா ........ லா .........

தலையை வாரிப் பின்னிடுவேன்
தலைக்கு மாலை சூட்டிடுவேன்
பாலும் பழமும் தந்திடுவேன்
பச்சைக்குழந்தை அழவேண்டாம்
பலூனும் பந்தும் நான் தருவேன்
பந்து விளையாடிடுவோம்
அம்புலி மாமா காட்டிடுவேன்




லா .........லா ........ லா ........ லா .........
லா .........லா ........ லா ........ லா .........


சின்னப் பொம்மை நீயல்லவோ
என் கண்மணி நீயல்லவோ
வண்ணப் பொம்மை நீயல்லவோ
ஏன்னை விட்டுப் போகாதே
என்னை விட்டுப்போகாதே



# இயற்கைக்காட்சி

அன்றொரு நாள் அப்பாவோடு
கோழும்புக்குச் சென்றேன்
அன்புத் தங்கை அன்பரசி
என்னுடன் வந்தாள்
புகைவண்டிப் பிரயாணம்
நல்லாயிருந்தது





நடுக்காட்டில் நின்ற பின்பு
நடுக்கம் வந்தது
அங்கேகண்ட காட்சியினால்
நடுக்கம் பறந்தது


பச்சைக்கிளி கூட்டம்
ஒன்று பழம் பறித்தது



இச்சை கொண்ட மற்றக் கிளிகள்
கீ கீ என்றன
நீல மயில் தோகை விரித்து
ஆடி நின்றது

கோலமயில் அழகைக் கண்டு
கொக்கும் பார்த்தது
வானமெல்லாம் இருட்டிக் கொண்டு
மின்னிப் பார்த்தன


கொள்ளையான குயில் கூட்டம்
கூ கூ என்றன
குந்தி மரத்திலிருந்து மந்தி
குனிந்து




புற்றில் பாம்பு எழுந்து நின்று
படமெடுத்தது

சுற்றி வந்து கண்ணை
மின்னி என்னோ செய்தது

பற்றி எம்மை இழுத்துக் கொண்டு
வண்டி சென்றதே





## புகைவண்டி

அன்றோர் நாள் நாமும் எல்லோ
கொழும்புச் சென்றோம்
பயணச் சீட்டை வரிசையிலே
வாங்கியும் கொண்டோம்






பிளாற் போமில் மக்கள் கூட்டம்
நிரம்பி வழிந்தது யாழ் தேவிப்
புகைவண்டி கூவிக் கொண்டு
விரைந்து வந்தது

புகை வண்டி வாயில் நோக்கி
மக்கள் ஓடினர்
ஓடும் போது மூட்டை முடிச்சுக்
கொண்டு ஓடினர்

இளனி இளனி என்றொருவன்
அங்கே வந்தான்
இளனி வாங்கும் மக்கள் கூட்டம்
அவனைச் சூழ்ந்தது

புகை வண்டிக் கை காட்டி
சரிந்து விட்டது
பச்சை கொடி கட்ட ஒருவர்
வண்டி விசிலடித்தது




தொட்டில் போல அசைந்து
வண்டி சென்றது
குறட்டை விட்டு மக்கள் அந்தோ
தூக்கி விட்டனர்

பதுங்கி இருந்த கள்ளர் கூட்டம்
அங்கு நுழைந்து
பயணிகள் பண மெல்லாம்
திருடிக் சென்றது.




ஐயோ அம்மா என்றலறி
மக்கள் புலம்பினர்
இதற்கிடையில் வண்டி
கொழும்பை வந்தடைந்தது

அன்று பெற்ற அனுபவத்தை
எடுத்துக் கூறினோம்
புகைவண்டிப் பிரயாணம்
இன்றெமக் கில்லை.



புகை வடிண்டிப் பிரயாணம்
இல்லையென்ற ஏக்கம்
இருபது வருடங்கள் நன்றாக
நீண்டு விட்டது.

இரண்டாயிரத்து பதின்னான்காம்
ஆண்டு பிறந்தது
யாழ்தேவிப் புகை வண்டி
மீண்டும் வந்தது

உல்லாசமாய் மக்கள் ஏறிப்
பயணம் செய்ய
நல்ல வாய்ப்பும் இன்று எமக்குக்
கிடைத்து விட்டது



# பள்ளிச் சிறுவர் நாங்களே

லா லல்லோ... லாலல்லா.... லால..லா..லா
லா லல்லோ... லாலல்லா.... லால..லா..லா



பள்ளிச் சிறுவர் நாங்களே
பள்ளிச் சிறுவர் நாங்களே
துள்ளித் துள்ளி ஓடுவோம்
துவண்டு விளையாடுவோம்.



கள்ளங் கபடம் எமக்கில்லை
கடவுளை நன்றாய்த்தொழுதிடுவோம்
கொள்ளை இன்பம் பெற்றிடுவோம்
கொண்டாட்டங்கள் பல நடத்திடுவோம்

அம்மா அப்பா ஆனவரை
பாதங்கள் தொட்டு வணங்கிடுவோம்
சும்மா சும்மா அழமாட்டோம்
சுதந்திரமாய் நாம் படித்திடுவோம்.

அன்பும் அறிவும் தந்து விடும்
ஆசானை நாம் பணிந்திடுவோம்
பொன்னிலும் பொருளிலும் மேலான பெரியோரை
மதித்து நாமும் நடந்திடுவோம்.

அன்பும் கருணையும் உயிர்களிடம்
வைத்து நாமும் வளந்திடுவோம்

பண்பும் பணிவும் காட்டிடுவோம்
பள்ளிக்கூடம் சென்றிடுவோம்



பாடங்கள் நன்றாய் படித்திடுவோம்
பட்டங்கள் யாவும் பெற்றிடுவோம்
ஆட்டங்கள் நன்றாய் போட்டிடுவோம்
அழகு மயிலாய் ஆடிடுவோம்

குயிலை போல கூவிடுவோம்
கூட்டமாய் கூத்தாடிடுவோம்
புள்ளி மானைப் போல் துள்ளிடுவோம்
புலியென நாமும் பாய்ந்திடுவோம்.

குறும்புகள் ஒரு நாளும் செய்ய மாட்டோம்
குட்டிக் கதைகள் கேட்டிடுவோம்
எறும்புகள் போல வாழ்ந்திடுவோம்
ஏற்றங்கண்டு மகிழ்ந்திடுவோம்



பட்டுச் சட்டை பாவடை
இட்டமுடன் நாமணிந்திடுவோம்
பட்டாம் பூச்சி போலவே
பள்ளிக்கூடம் நாம் பறந்து செல்வோம்

# மிருகங்கள் விழா வெறுத்து மகிழ்ந்தன




காடு நல்ல காடு நீண்ட
பெரியகாடு
பாடும் பறவைக் கூட்டங்கள்
குடியிருக்கும் காடு

பட்ட மரப் பொந்திலே
பச்சைகிளிகள் இருக்கையாம்
வட்டமாக கூடியே பறவை
இனம் பாடுமாம்




மானினங்கள் கேட்குமாம்
மயிலினங்கள் ஆடுமாம்
வானரங்கள் கூடியே வந்து
தாளம் போடுமாம்



இன்பமான வாழ்ககையில்
இடையூறும் வந்ததாம்
துன்பமான கர்ச்சனை
தூரத்தே கேட்டதே


காட்டு மிருகங்கள் கூடியே
நாளொரு மிருகமாய்
போட்டி இன்றிச் சிங்கத்தின்
இரையாகவே சென்றனர்

முயலின் முறை வந்தது
மூளையுள்ள முயலாரும் சிங்கத்தின்
அயலில் சென்று நல்ல காரணம்
ஒன்று மட்டும் கூறினார்.



பெரிய இராசாச் சிங்கமொன்று
என்னை விரட்டி வந்தது
அரிய உள்ளங்கள் பசியைப் போக்க
ஓடி நானும வந்து விட்டேன்

காடு அதிர்ந்த கர்ச்சனை ஒன்று
போட்டுச் சிங்கமும்
நாடு மிடத்தைக் காட்டும் என்று
முயலைக் கேட்டது



கேட்ட மகிழ்ச்சி காட்டாமல்
மெல்ல நடந்து பாண் கிணற்றை
வாட்டமின்றிக் காட்டவே
சிங்கமதில் பாய்ந்தது




முயலின் சாவும் நின்றது
காட்டு மிருகங்கள் தப்பின
முயலை வாழ்த்தி மிருகங்கள்
விழா வெடுத்து மகிழ்ந்தன.

## அழகு மயில்

அழகு மயிலே அழகு மயிலே
ஆடிக் காட்டுவாய்
அழகான நீண்ட தோகையை
விரித்து ஆடிக்காட்டுவாய்





முருகன் ஏறி உலா வருவதால்
பெருமை பெற்றாயே
பச்சை மயில் வாகன் என்று
பெயரும் வந்ததே

லால லல்லா.... லாலல்லலா
லால லல்லா.... லாலல்லலா

## பச்சைக்கிளி



பச்சைக் கிளியே
கீ கீ கீ
பஞ்ச வர்ணக் கிளியே
கீ கீ கீ




கழுத்தில உனககு ஆரமோ
பவள வாயும் அழகுதான்
பட்டு மேனி தொட்டு நான்
மழலை பேச வருவாயே

## கோழி



கோழி கோழி
கொக் கொக் கோ
கொண்டைக் கோழி
கொக்கரக் கோ







பெட்டைக் கோழி
முட்டை இடு
தம்பிக்கு இரண்டு
முட்டை கொடு

## குயில்

கூ கூ என்று கூவும்
குயிலாரே உன்னுடன்
கூவி விளை யாடவேண்டும்
வருவா யோ






மாம்பழங்கள் உண்ணத்
தருவேன் குயிலாரே
மாஞ்சோலை தேடி நீ
திரியவேண்டாம் குயிலாரே


# மான்

லால லல்லா.... லாலல்லலா
லால லல்லா.... லாலல்லலா
துள்ளித் துள்ளி ஓடும்
அழகுப் புள்ளி மானே
அள்ளி உள்ளம் கொள்ளை
கொள்ளும் புள்ளிமானே

நீண்ட தூரம் துளித்துள்ளி
ஓடாதே புள்ளிமானே
ஏன்னையும் கூட்டிச்
செல்வாய் புள்ளி மானே




# சந்தை



சந்தை சந்தை சந்தை
சந்தியில் கூடும் சந்தை
சாமான் வாங்கும் சந்தை
சனங்கள் கூடும் சந்தை

புாக்கு வெற்றிலை சுண்ணாம்பு
பக்குவமாய் வாங்கலாம்
பாவற்காய் வாங்கலாம் பயிற்றங்
காயும் வாங்கலாம்.

பாசிப் பயறு வாங்கலாம்
மிளகாயும்  வாங்கலாம்
பூசனிக்காய் வாங்கலாம்
புடலங்காயும் வாங்கலாம்



கத்தரிக்காய் வாங்கலாம் நல்ல
கறிமிளகாய் வாங்கலாம்
குத்தரிசி வாங்கலாம் தேங்காயும்
வாங்கலாம்

பொன்னாங்காணி வாங்கலாம்
பொங்கலரசி வாங்கலாம்
கீரை வகை வாங்கலாம் தேவையான
எல்லாமே வாங்கலாமதோட்டம் பாரும் தோட்டம்
பாரும்

# தோட்டம் பாரும்



தோட்டம் பாரும் தோட்டம் பாரும்
தோட்டத்தைப் பாரும்
வாட்ட சாட்ட மாயிருக்கும்
வடிவைப் பாரும்

வரம்பு வாய்க்கால் உயர்ந்து
நிற்கும் வடிவழகைப் பாரும்
நீர் நிரம்பி நிற்பதனால் நெல்லு
வளர்ந்து நிற்கும் பசுமையைப் பாரும்



ஓடி ஓடிச் செல்கின்ற மாடுகள்
பாரும் அவை
ஆடி அசைந்து உழுகின்ற
வடி வழகைப் பாரும்

கொத்துக் கொத்தாய் நெல்மணிகள்
விளைச்சலைப் பாரும் மனிதன்
சொத்தாக மண்ணிலவை சாய்ந்து
கிடப்பதைப் பாரும்



புதிரெடுத்து பொங்கல் வைக்கும்
புதுமையைப் பாரும் மனிதன்
புதுவாழ்வு பொலிந்து எழும்
புதுமையைப் பாரும்.

# காட்டில் ஒரு தோட்டம்

காட்டில் ஒரு தோட்டம்
திராட்சைப் பழந்தோட்டம்



கூட்டமாக மரங்கள்
நாடி வளருந்தோட்டம்



கொக்கு குருவி மைனா
கூடிக் குலாவுந் தோட்டம்



பக்கத்திலே நரியாரும் பசித்து
வந்தார் விரைவாக

எட்டி எட்டிப் பார்த்தார் பழங்கள்
சுற்றும் எட்ட வில்லை

தொங்கித் தொங்கி பாய்ந்தார்
பழத்தை தொடவும் முடிய வில்லை


பட்ட மரக் கொப்பை
பாய்ந்து இழுத்து வந்தார்

சட்டமாக நிறுத்தித் தான்
அதிலே ஏறி நின்றார்

திட்டம் போட்ட நாரியர்
திராட்சைப் பழந்தின்றார்

வாட்டும்பசி தீரவே
வாழ்த்தி விட்டுச் சென்றார்





# சின்னஞ்சிறு பாப்பா

சின்னஞ் சிறுபாப்பா சிங்காரப் பாப்பா
சொன்ன பேச்சை கேட்டாத்தான் நல்ல பாப்பா
அம்மா அப்பா பேச்சை நாளும் கேட்டிடவேண்டும
சும்மா சும்மா அழுது கண்ணீர் வடிக்கக்கூடாது

பட்டுச் சட்டை பாவாடை நீ அணிய வேண்டும்
பொட்டு நன்றாய் நெற்றியிலே வைத்திட வேண்டும்
பள்ளிக் கூடம் படிக்க நாளும் சென்றிட வேண்டும்
துள்ளிக் குதித்துச் சந்தோஷமாய் நடந்திடுபாப்பா

அறிவு சொல்லும் ஆசானை பணிந்திட வேண்டும்
தவறு குறும்பு ஒருநாளும் செய்யக்கூடாது
பணிவும் பண்பும் அன்பும் நீ பெற்றிட வேண்டும்.
இனிய மழலை பேசி நாளும் வாழ்ந்திடு பாப்பா



மயிலைப்போல ஆடி ஆடி மகிழ்ந்திட வேண்டும்.
குயிலைப் போல பாடி உள்ளம் குளிர்ந்திட வேண்டும்.
புள்ளி மான் குட்டி போல துள்ளிட வேண்டும்
அள்ளி உன் அழகை நாமும் பருகிட வேண்டும்.

உயிர்களிடத்து அன்பு நீ காட்டிட வேண்டும்.
உண்மை பேசி உத்தமராய் வாழ்ந்திட வேண்டும்
பெரியவரை மதித்து நீ வாழ்திடு பாப்பா
அறிவுரைகள் கேட்டு நாளும் வளர்ந்திடு பாப்பா.

சட்டங்கள் கடந்து நீ சொல்லக்கூடாது நல்ல
திட்டங்கள் போட்டு நாளும் நடந்திரு பாப்பா
துடுக்குத்தனம் சனரேனும் நீ காட்டக்கூடாது
எடுப்பாகப் பெருமை யோடு வாழ்ந்திடு பாப்பா





# எங்கள் வீட்டுப் பூனையார்

எங்கள் வீட்டுப் பூனையார்
அழகான பூனையார்
தொங்கிப் பாய்ந்து மேலே ஏறுவார்
வீட்டுச் சுவரில் பதுங்குவார்




பஞ்சு போன்ற கால்களும்
பளபளக்கும் கண்களும்
மினு மினுக்கும் மேனியும்
கொண்ட எங்கள் பூனையார்

மியா மியா என்றுமே
மென்மையாக கத்துவார்
மீசை வைத்த பூனையார்
அழகான பூனையார்




எலியைத் தேடிச் செல்லுவார்
பிடித்து வந்து தின்னுவார்
புலியைப் போலப் பதுங்குவார்
கோபம் வந்தால் சீறுவார்



வாள் போன்ற நகங்களை
மரத்தில் தீட்டிக் கொள்ளுவார்
வாலை வாலை ஆட்டிக்கொண்டு
காலைக் காலைச் சுற்றுவார்

கண்ணை மூடிக் கொண்டுமே
காய்ச்சியபாலை நக்குவார்
விண்ணை முட்டும் மகிழ்ச்சியால்
துள்ளித் துள்ளி ஓடவார்







நா.கணேசபிள்ளை அவர்களின்
நினைவாக வெளியிடப்படுகின்றது
25.02.2015